செ.வெ.எண்.65 நாள்.25.04.2017

# திருநெல்வேலி மாநகராட்சி
## பத்திரிக்கைச் செய்தி

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண்.26 பகுதிக்குட்பட்ட திருமால்நகரில் அமைந்துள்ள Hillock பகுதியில் பொதுமக்கள் பொழுது போக்கு அம்சங்களுடன் அபிவிருத்தி செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் 25.04.2017 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்ற மாணவ மாணவியரின் புதுமையான கருத்துக் கேட்பு கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர், மாநகரப் பொறியாளர், அண்ணா பல்கலைகழக முதல்வர் மற்றும் சித்த மருத்துவ கல்லூரி பேராசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி கலந்தாய்வுக் கூட்டத்தில் அண்ணா பல்கலைகழக மாணவ மாணவிகள் மற்றும் சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சுமார் 50 பேர் கலந்து கொண்டு மூலிகைத் தோட்டம், இயற்கை உணவகம், சூரிய மின்தகடுகளால் குகை போன்ற அமைப்பு, செயற்கை நீர்வீழ்ச்சி குடைகள், ரோப் கார், அருங்காட்சியகம், பூங்கா போன்ற பல புதுமையான அரிய ஆலோசனைகளை தெரிவித்தனர். திருநெல்வேலி மாநகராட்சியில் மேற்படி திருமால்நகர் மலைப்பகுதியில் பார்வையாளர் கோபுரம் மற்றும் சாலை வசதி ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.14.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு உரிய பிரேரணை தயார் செய்து அரசின் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாநகராட்சியை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் நகரின் இடையே செல்லும் கால்வாய்களில் குப்பைகள் கொட்டா வண்ணம் தடுப்பு வேலி மாநகராட்சி மூலம் அமைப்பது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின்

தலைமையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர். மேற்படி கலந்தாய்வுக் கூட்டத்தில் மாநகராட்சி செயல்படுத்தும் பணிகளுக்கு உரிய ஒத்துழைப்பு வழங்குமாறு நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேற்படி பணிகளை உடன் விரைந்து செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், மாநகராட்சி ஆணையாளரிடம் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

S. Santhi
Skilled Asst II
Tirunelveli Corporation